# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 27.01.2020 | 1) இம்மாநகராட்சி மேற்கு மண்டல எல்லைக்குட்பட்ட எம்.ஜி.ஆர். பூங்கா அபிவிருத்தி பணி மதிப்பீடு ரூ. 3.05 கோடியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி இடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள சுற்று சுவர் நீளத்தை விட ஆக்கிரமிப்புகளை தடுக்கும் பொருட்டு, கிழக்கு பகுதியில் கூடுதலாக சுற்று சுவர் கட்டப்பட்டுள்ளது. எனவே கூடுதலாக கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் இடத்தில் விடுபட்டுள்ள இனங்களான Creeper plantation Walking track, மாநகராட்சி logo platform மற்றும் குடிநீர் அமைக்கும் பணியினை ரூ. 24.20 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 15) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (இலட்சத்தில்)** |
| 1 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். பூங்காவில் சிறு சிறு செடிகள், மரங்கள் நடைபாதை அமைத்தல் குடிநீர் அமைத்தல் மற்றும் மாநகராட்சி logo platform அமைக்கும் பணி | 24.70 |
| | **மொத்தம்** | 24.70 |
| | எனவே மேற்படி பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 49.75/– இலட்சத்தில் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இ2/3413/2019 | |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட தெற்கு காட்டன் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பணிமனை கட்டிடங்கள் மிகவும் பழைமை வாய்ந்ததாலும், அபாயகரமான நிலையில் கீழே விழுந்து விடுகிற நிலைமையில் இருந்ததாலும், கட்டிடங்கள் இடிக்கப்பட்டு தற்பொழுது தரைமட்டமான நிலையில் உள்ளது. இந்நிலையில் மாநகராட்சிக்கு சொந்தமான வாகனங்களினை பராமரிப்பு செய்யும் வகையிலும், வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாகவும் மேற்படி காலி இடத்தில் புதிதாக பணிமனை மற்றும் காவலர் அறை அமைக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே இதனை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை ரூ 42.50 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 16)அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| 1 | கிழக்கு மண்டல பகுதிக்குட்பட்ட தெற்கு காட்டன் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் புதிதாக | 42.50 |

| | | |
|---|---|---|
| | பணிமனை மற்றும் காவலர் அறை கட்டும் பணி | |
| | **மொத்தம்** | **42.50** |
| | எனவே மேற்படி பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. **42.50/–** இலட்சத்தில் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>**1)** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>**2)**மாநகராட்சி பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ2/00024/2020 | |
| | **3)**இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு துறைமுக சாலை முத்துநகர் கடற்கரை பூங்கா மேம்படுத்தும் பணியில் கடைகள் கட்டும் பணிக்காக ரூ. **36,00,000/–** மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு **12.03.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை **17.06.2019** அன்று திறக்கப்பட்டது.<br>**1)** திரு. V. Thangaraj<br>மதிப்பீட்டை விட 0.16 சதவிகிதம் குறைவு ( ரூ. **31,45,819.65)**<br>**2)**திரு. R.Thangaraj<br>மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவு ( ரூ. **31,48,873.65)**<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.16** சதவிகிதம் குறைவான தொகை ரூ.**31,45,819.65** (GST) இல்லாமல் கொடுத்துள்ள திரு. V. Thangaraj என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>**1)**மதிப்பீட்டை விட **0.16** சதவிகிதம் குறைவாக திரு. V. Thangaraj ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>**2)**பணியின் அவசரம் கருதி மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>இ1/03209/2015 (Pearl Beach) | **17)**அலுவலகக் குறிப்பு **1** ஒப்புதல் வழங்கப்பட்டது.<br>அலுவலகக் குறிப்பு **2** பின்னேற்பு வழங்கப்பட்டது. |
| | **4)**இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்களை ரோச் பூங்கா மற்றும் Eco park க்கும் இடைப்பட்ட தெற்கு பீச் ரோடு பகுதியில் அமையப்பெற்றிருக்கும் கடைகள் (Kiosk) மற்றும் தள்ளுவண்டிகளுக்கு மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் **10.01.2020** அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மேற்படி இனத்திற்கு ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்ட விபரப்படி | **18)**அலுவலக குறிப்பு **1** ,**2**, **3** மற்றும் **4** அனுமதிக்கப்பட்டது. |

ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி இனத்திற்கு ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**கடை எண். 2**

தெற்கு பீச் ரோடு ரோச் பூங்கா சாலையில் அமையப் பெற்றிருக்கும் கடை (Kiosk) எண் 2ற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ..எண் | பெயர் | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.(மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு. சுப்பிரமணியன் (எ) ராஜேஷ்<br>133/டி வி.எம்.கோவில் தெரு<br>தூத்துக்குடி | ரூ. 100/– | 6,500/– |
| 2 | திரு.முகம்மது யாகூப்ஷா<br>1 எச்/806ஏ ஹவுசிங்போர்டு<br>மில்லர்புரம்<br>தூத்துக்குடி. | | 5,800/– |

வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு. சுப்பிரமணியன் (எ) ராஜேஷ் என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத்தொகை ரூ. 50,000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண்.769149 நாள் 09.01.2020 இணைத்து உரிமைத் தொகை ரூ 6,500/– (ஆறாயிரத்து ஐந்நூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு.முகம்மது யாகூப்ஷா என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத்தொகை ரூ. 50000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண். 095058 நாள் 09.01.2020 இணைத்து உரிமைத் தொகை ரூ 5,800/– (ஐந்தாயிரத்து எண்ணூறு என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சுப்பிரமணியன் (எ) ராஜேஷ் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. முகம்மது யாகூப்ஷா என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

**கடை எண். 3**

தெற்கு பீச் ரோடு ரோச் பூங்கா சாலையில் அமையப் பெற்றிருக்கும் கடை (Kiosk) எண் 2ற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ..எண் | பெயர் | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.(மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு. பியோ காட்வின்,<br>14/1304 பாரதி நகர் 4வது தெரு,<br>தூத்துக்குடி | ரூ. 6.100/– | 6,500/– |
| 2 | திரு.இ.முருகன்<br>4/184–2 ஸ்டேட் பாங்க் காலனி<br>தூத்துக்குடி. | | 5,900/– |
| | வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு. பியோ காட்வின் என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத்தொகை ரூ. 50,000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண்.095057 நாள் 09.01.2020 இணைத்து உரிமைத் தொகை ரூ 6,500/– (ஆறாயிரத்து ஐந்நூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.<br>வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு.முருகன் என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத்தொகை ரூ. 50000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண். 095059 நாள் 09.01.2020 இணைத்து உரிமைத் தொகை ரூ 5,900/– (ஐந்தாயிரத்து எண்ணூறு என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.)<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பியோ காட்வின் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. முருகன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.<br>**தள்ளுவண்டி**<br>தெற்கு பீச் ரோடு ரோச் பூங்கா சாலையில் அமையப் பெற்றிருக்கும் தள்ளுவண்டி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | | |
| வ.எண். | பெயர் | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகை | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. (மாதம் ஒன்றுக்கு) |
| 1 | திரு.ஷீலா<br>39ஐ/1சி, வண்ணார் 3வது தெரு,தூத்துக்குடி. | ரூ.1,200/– | ரூ.1,000/– |
| 2 | திரு. பாலகணேசன்<br>2.302/3 அன்னை ஸ்குயர் தெரு,கோரம்பள்ளம்<br>தூத்துக்குடி. | | ரூ.1,500/– |
| | வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.ஷீலா, என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத் தொகை ரூ. 50,000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண். 051296 நாள் 09.01.2020 இணைத்து உரிமைத்தொகை ரூ. 1,000/– (ரூபாய் ஆயிரம் ) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார். | | |

| | | |
|---|---|---|
| | வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு. பாலகணேசன்என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத்தொகை ரூ. 50000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண். 051299, நாள் 09.01.2020 இணைத்து உரிமைத் தொகை ரூ 1,500/– (ஆயிரத்து ஐந்நூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.)<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பாலகணேசன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. ஷீலா என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.<br>தெற்கு பீச் ரோடு ரோச் பூங்கா சாலையில் அமையப் பெற்றிருக்கும் தள்ளுவண்டி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது | |
| **வ.எண்.** | **பெயர் (ம)மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகை ரூ.** | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை (மாதம் ஒன்றுக்கு) |
| 1 | திரு.ஷீலா<br>39ஐ/1சி, வண்ணார் 3வது தெரு,தூத்துக்குடி. | ரூ.1,000/– |
| 2 | திரு. பாலகணேசன்<br>2.302/3 அன்னை ஸ்குயர் தெரு,கோரம்பள்ளம் தூத்துக்குடி.<br>} 1,200/– | ரூ.1,500/– |
| | வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.ஷீலா, என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத் தொகை ரூ. 50,000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண். 051298 நாள் 09.01.2020 இணைத்து உரிமைத்தொகை ரூ. 1,000/– (ரூபாய் ஆயிரம் ) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.<br><br>வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு. பாலகணேசன்என்பவர் மேற்படி இனத்திற்கு முன் வைப்புத்தொகை ரூ. 50000/– (ஐம்பதாயிரம்) வரவோலை எண். 051297, நாள் 09.01.2020 இணைத்து உரிமைத் தொகை ரூ 1,500/– (ஆயிரத்து ஐந்நூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.)<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பாலகணேசன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. ஷீலா என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| | அலுவலகக் குறிப்பு<br>1) கடை எண்.2–க்கு திரு. சுப்பிரமணியன் (எ) ராஜேஷ் என்பவரால் வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 6,500/– தொகையினை அனுமதிக்கலாம்<br>2) கடை எண்.3ற்கு திரு. பியோ காட்வின் என்பவரால் வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 6,500/– தொகையினை அனுமதிக்கலாம்.<br>3) தள்ளுவண்டி 1ற்கு திரு. பாலகணேசன் என்பவரால் வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 1500/– தொகையினை அனுமதிக்கலாம்.<br>4) தள்ளுவண்டி 2ற்கு திரு. பாலகணேசன் என்பவரால் வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 1500/– தொகையினை அனுமதிக்கலாம்.<br><br>எனவே, மேற்படி இனங்களுக்கு மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் 2020–2023 வரை அனுமதி வழங்குவதற்கும், மாமன்றம் அனுமதிக்கலாம்,<br>ந.க.எண். 02739/19/அ16 | |
| | 5)தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ரோச் பூங்கா அருகில் அமையப் பெற்றிருக்கும் கடைகள் (Kiosk) மற்றும் தள்ளுவண்டிகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் வகைக்காக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் தினகரன் நாளிதழில் 07.01.2020 அன்று வெளியிடப்பட்டதற்கான கட்டணம் ரூ.14,040/– மற்றும் அதற்கான GST வரியும் சேர்த்து மொத்தம் ரூ. 14,742/– மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு– மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.02739/19/அ16 | 19) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் 06.01.2020 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக அலுவலர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனைக்கு இடம் வழங்குவது தொடர்பான கூட்ட நடவடிக்கைகள் பார்வைக்கும் பதிவுக்கும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.<br>1)தூத்துக்குடி மாநகராட்சி சீர்மிகு நகர் திட்டத்தின் கீழ் பழைய பேருந்து நிலையம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை இடமும் ஒருங்கிணைத்து புதிய பேருந்து நிலையம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. பழைய பேருந்து நிலையத்தின் அருகில் இயங்கி வருகின்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நகர பணிமனையின் 1.33 ஏக்கர் இடம் பரப்பளவுக்கு பதிலாக புதிய பேருந்து நிலையத்தில் 1.94 ஏக்கர் இடம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது கூடுதலாக இடம் வழங்க வழிவகை உள்ளதா என மேற்கண்ட நபர்களால் தள ஆய்வு செய்யப்பட்டதில் உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தின் வடபுறம் கிழமேலாக 47.4 மீட்டர் தென்வடலாக 10.00 மீட்டர் | 20)அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | (47.4 x 10 x 474 சமீ) (11.7 சென்ட்) இடம் மட்டும் கூடுதலாக வழங்குவதற்கு வழிவகை உள்ளது. இதற்கு நான்கு மாலாக தென்புறம் மீளவிட்டான் மெயின் ரோடு மேற்கு புறம் அம்மா உணவகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது. வடக்கு பக்கம் புதிய பேருந்து நிலைய பகுதி, கிழக்கு பக்கம் உழவர் சந்தை உள்ளது. இதற்குரிய இடத்தின் மொத்த பரப்பளவு 2.06 ஏக்கர் இடத்தினை பணபரிமாற்றம் இல்லாமல் வழங்க வழிவகை உள்ளது.<br>2)புதிதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு சீர்மிகு பணிமனை கட்டுவதற்கு தோராயமாக ரூ. 8.99 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி மூலம் கட்டி வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.<br>3)ரஹ்மத் நகரில் அமைந்துள்ள புற நகர் பணிமனை வளாகத்தில் தற்காலிகமாக பணிமனை அமைப்பதற்கு மாநகராட்சி மூலம் தோராயமாக ரூ. 31.20 இலட்சம் செலவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு ஏற்படுத்தி தர முடிவு செய்யப்பட்டது.<br>மேலும் மேற்படி கூட்ட நடவடிக்கை குறிப்பு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்காக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>கூட்ட நடவடிக்கைகளை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்புவதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். இ1/3209/2015 | |
| | 7) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சியில் பல்வேறு வார்டுகளில் புதிய LED தெரு விளக்குகள் அமைத்தல் (வார்டு எண் 1,4,17,27,31,32,33, 34,41,42,46,52,24,26 மற்றும் 40) பணிக்காக ரூ. 21,80,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 07.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 07.01.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) M/S. Sudha Engineering<br>மதிப்பீட்டை விட 0.29 குறைவு (ரூ. 19,21,245.00)<br>2) M/S. Suyambu Industrial Electrical<br>மதிப்பீட்டை விட 7.44சதவிகிதம்அதிகம் (ரூ. 20,70,250.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.29 சதவிகிதம் குறைவான தொகை ரூ 19,21,245.00 (GST இல்லாமல்) கொடுத்துள்ள M/S Sudha Engineering என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட 0.29 சதவிகிதம் குறைவாக கொடுத்த M/S Sudha Engineering ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ1/2979/2019 | 21) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | 8) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்–குடிநீர்நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பிரையண்ட் நகர்,முடுக்கு காடு, வேலாயுத நகர் மற்றும் இந்திரா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் குடிநீர் விநியோக மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நான்காவது பைப்லைன் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணிக்காக ரூ. 22,50,000/– | 22) அலுவலகக் குறிப்பி அங்கீகரிக்கப்பட்ட து. |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 07.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 07.01.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1)திரு. S.Syed Sirajudeen<br>மதிப்பீடடை விட 0.52 சதவிகிதம் குறைவு (ரூ. 18,43,653.00)<br>2)திரு.T. Murugan<br>மதிப்பீட்டை விட 12.54 சதவிகிதம் அதிகம் (ரூ. 20,85,653.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.52 சதவிகிதம் குறைவான தொகை ரூ. 18,43,653.00 (GST) இல்லாமல் கொடுத்துள்ள திரு. S.Syed Sirajudeen என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மதிப்பீட்டை விட 0.52 சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு. S.Syed Sirajudeen ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம். இ2/02376/2019 | |
| | 9) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீர்மிகு நகரம் " (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீர்மிகு நகரம் " (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண். (MALL) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.<br>அதன்பேரில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப் பகுதியில் குடிநீர் விநியோகத்தில் DMA Zonation with SCADA arrangements பணிக்கு ரூ. 102.64 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட் அவர்களின் தலைமையில நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 06.06 நாள் 22.10.2019ல் ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்படி திட்ட அறிக்கையினைகூர்ந்தாய்வு செய்த TUFIDCO நிறுவனத்தினர் மேற்படி மதிப்பீட்டில் சில மாற்றங்கள் செய்திட அறிவுறுத்தப்பட்டது. 10.01.2020 அன்று சீர் மிகு நகரதிட்டம் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் TUFIDCO நிறுவனம் தெரிவித்த மாற்றங்களை உடன் மேற்கொண்டு காலதாமதத்தினை தவிர்த்திட முதல் கட்டமாக( Phase-I) இரண்டு சிப்பங்களுக்கான (Two Package) மதிப்பீடு தயாரித்து உரிய நிர்வாக அனுமதி பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.<br>அதன்பேரில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப்பகுதியில் குடிநீர் விநியோகத்தில் DMA Zonation with SCADA arrangements பணியினை பகுதி–1 (Phase-I) என முதற்கட்டணமாக இரண்டு சிப்பங்களுக்கு (Two Package) பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகம் (TWICE) அவர்களால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | 23) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது . |

| SL. NO. | Package | No.of Zone | No.of DMA | Est.Cost (Rs.Cr) |
|---|---|---|---|---|
| 1 | DMA Water Distribution Management for Thoothukudi City Municipal Corporation Water Supply System ABD area – Package No.1 | 5 | 13 | 13,50 |
| 2 | DMA Water Distribution Management for Thoothukudi City Municipal Corporation Water Supply System ABD area – Package No.1 | 4 | 11 | 14.48 |

| | | |
|---|---|---|
| | எனவே தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப் பகுதியில் குடிநீர் விநியோகத்தில் DMA Zonation with SCADA arrangements பணியினை பகுதி–1 (Phase-I) என திட்டத்தில் மேற்காணும் பட்டியலில் காணும் சிப்பம் எண் 1 மற்றும் சிப்பா் எண்.2இல் (Phase-I& Phase-II) கண்டுள்ள மதிப்பீட்டின் படி சீா்மிகு நகர திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிா்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களுக்கு பிரேரணை சமா்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அ.கு. மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/3209/2015 DMA –Zone) | |
| | 10) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீா்மிகு நகரம் "(Smart City) தமிழ்நாட்டில் தோ்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீா்மிகு நகரம் "(Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MALL) எண்.112 நாள் 31.07.2015 கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br>அதன்பேரில் தலைவா், தூத்துக்குடி ஸ்மாா்ட் சிட்டி லிமிட்டெட், அவா்களின் தலைமையில் நடைபெற்ற நிா்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 07.05 நாள் 19.12.2019 இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | 24) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| வ.எண். | பணிகளின் பெயா் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) |
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சிதம்பரநகா் பகுதியில் வணிகவளாகம் கட்டும் பணி மேற்கொள்ளுதல் | 14.96 |
| | **மொத்தம்** | **14.96** |
| | எனவே தூத்துகுடி மாநகராட்சிப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான சிதம்பரநகா் இடத்தில் வணிகவளாகம் கட்டும் பணியினை ரூ 14.96 கோடி மதிப்பீட்டில் ஸ்மாா் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிா்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களுக்கு பிரேரணை சமா்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அ.கு. மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/3209/2015 (CN Mall) | |
| | 11) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீா்மிகு நகரம்" (Smart City) தமிழ்நாட்டில் தோ்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீா்மிகு நகரம்" | 25) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண். (MALL) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br>அதன்பேரில் தலைவர் தூத்துக்குடி ஸ்மார் சிட்டி லிமிட்டெட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 07.05 நாள் 19.12.2019இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | |
| **வ.எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி)** |
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடர்ததில் விவிடி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அருகில் நகர மாநாட்டு மையம் (City Convention Centre) கட்டுதல் | 10.73 |
| | **மொத்தம்** | 10.73 |
| | எனவே தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் விவிடி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அருகில் நகர மாநாட்டு மையம் ((City Convention Centre) கட்டும் பணியினை ரூ.10.73 கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 (CC - Centre) | |
| | 12) இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவின் முலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் முதிர் கொசுக்களை ஒழிக்க VEHIC;E MOUNTED FOGGING MACHINE மூலம் இம்மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் OUTDOOR INDOR FOGGING வகைக்கு பயன்படுத்தப்படும் பைரித்திரம் (PYRETHRUM) என்ற மருந்தினை TNMSC அனுமதி பெற்ற M/S/ Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 1100/– (Plus GST @ 18% Rs. 198= Rs. 1298/-) வீதம் 1000 லிட்டர் Section 15 கீழ் அவசர அவசியம் கருதி வாங்கிட அனுமதியும் மற்றும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 13,00,000/– (ரூபாய் பதிமுன்று லட்சம்) னை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13 | 26) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 13) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ‘‘சீர்மிகு நகரம் ‘‘ (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட ‘‘சீர்மிகு நகரம் ‘‘ (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண். (MALL) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.<br>அதன்பேரில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப் | |

| | | |
|---|---|---|
| | பகுதியில் குடிநீர் விநியோகத்தில் DMA Zonation with SCADA arrangements பணிக்கு ரூ. 102.64 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட் அவர்களின் தலைமையில நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 06.06 நாள் 22.10.2019ல் ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்படி திட்ட அறிக்கையினைகூர்ந்தாய்வு செய்த TUFIDCO நிறுவனத்தினர் மேற்படி மதிப்பீட்டில் சில மாற்றங்கள் செய்திட அறிவுறுத்தப்பட்டது. 10.01.2020 அன்று சீர் மிகு நகரதிட்டம் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் TUFIDCO நிறுவனம் தெரிவித்த மாற்றங்களை உடன் மேற்கொண்டு காலதாமதத்தினை தவிர்த்திட இரண்டு கட்டங்களாக( Phase-I & Phase-II) மதிப்பீடு தயாரித்து உரிய நிர்வாக அனுமதி பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.<br>அதன்பேரில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப்பகுதியில் குடிநீர் விநியோகத்தில் DMA Zonation with SCADA arrangements பணியினை இரண்டாம் கட்டமாக (Phase-II) இரண்டு சிப்பங்களாக (Two Package) மேற்கொள்வதற்கு பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகம் (TWICE) அவர்களால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது | |

| **Sl.No.** | **Package No.** | **No.of Zone** | **No.of DMA** | **Est.Cost (Rs.Cr)** |
|---|---|---|---|---|
| 1 | DMA Zonation with SCADA arrangements for Thoothukudi City Municipal Corporation Water Supply System in ABD area Ward No. 3, 5 (p) 34, 43 (p) 46. 47 (p) 48(p) 49(p) 50(p) **Package No-1** | 7 | 18 | 14.32 |
| 2 | DMA Zonation with SCADA arrangements for Thoothukudi City Municipal Corporation Water Supply System in ABD area Ward No. 4,7,8,14 (Part) 15(p) 25(p) 27(p) 29, 30, 40(p) 44, 45, 50(p) – **Package No-II** | 3 | 7 | 13.80 |

எனவே தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப் பகுதியில் குடிநீர் விநியோகத்தில் DMA Zonation with SCADA arrangements பணியினை இரண்டாம் கட்டமாக (Phase-II) மேற்காணும் பட்டியலில் காணும் சிப்பம் எண்.1 மற்றும் சிப்பம் எண்.2இல் (Pack I & Pack 2) கண்டுள்ள மதிப்பீட்டின்படி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/3209/2015/ DMA-Zone) (Phase –II)

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.27.01.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி